# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108501

1. District மாவட்டம் : Coimbatore District | PS: காவல்நிலையம்: VACB | Year: ஆண்டு: 2021 | FIR No.: மு.த.அ. எண்: 08/2021/VAC/CB | Date: நாள்: 19.2.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 15.2.2021 1700 h. | Date to : நாள் வரை 19.2.2021 13.00 hrs.
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.2.2021 Time : நேரம் 15.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.2.2021 Time : நேரம் 15.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Computer tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: South Direction about 50 kms. O/O Deputy Registrar of cooperative Societies mahalingapuram Pollachi Coimbatore
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: C. Shivaji | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: Chinnasamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 46 years | (d) Nationality நாட்டினம்: Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: Secretary | (g) Address : முகவரி: TP SP 25 Thalavai Palayam Primary Agricultural Cooperative credit society

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Selvaraj a Deputy Registrar of Cooperative Societies Pollachi Circle, Coimbatore
   2. Arumugam Cooperative Sub Registrar / Field office Anamalai Block Thondamuthur Anamalai (TK) Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/2/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.2.2024

Name: பெயர் ..........................
Rank: நிலை .....................No. எண் ..........
Inspector ...

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.8/2021/AC/CB, u/s.7(a), 7(a) r/w.12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

19.02.2021ம் தேதி வெள்ளிக்கிழமை 15.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திரு.C.சிவாஜி, வயது -46, த/பெ.சின்னசாமி, செயலாளர், தளவாய்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், தொண்டாமுத்தூர், ஆனைமலை தாலுகா, கோவை என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரிடம் கூட்டுறவு துணை பதிவாளர் திரு.செல்வராஜா மற்றும் ஆனைமலை கூட்டுறவு சார் பதிவாளர் /கள அலுவலர் திரு.ஆறுமுகம் ஆகியோர் 17 பயனாளிகளுக்கு கூடுதலாக கடன் தொகை கொடுத்துள்ளதாக சொல்லி பைலை கிளறி வாதி மீது மேல் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பாமல் இருப்பதற்காகவும், பிரிவு 80 (1) ன் படி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கும் துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்களுக்காக கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் லஞ்சமாக பணம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 19.02.2021ம் தேதி 15.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 8/2021/AC/CB, u/s.7(a), 7(a) r/w.12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர்C.சிவாஜி, வயது -46,த/பெ.சின்னசாமி, செயலாளர், தளவாய்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், தொண்டாமுத்தூர், ஆனைமலை தாலுகா,கோவை.பெறுநர் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. ஐயா,நான் TP. Spl.25 தளவாய்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 10.10.2018-ம் தேதி முதல் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் சொசைட்டி மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கி

வருகிறோம். விவசாயிகள் பயிர்கடன் பெறுவதற்கு விண்ணப்பம், பட்டா, அடங்கல், சிட்டா போன்ற ஆவணங்களை இணைத்து கொடுப்பார்கள். நான் ஆவணங்களை சரிபார்த்து, நிர்வாக குழுவில் அனுமதி பெற்று மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் விண்ணப்பங்களை சரிபார்த்து சான்றிதழ் வழங்கிய பின் பயனாளிகளுக்கு அவர்களது சேமிப்பு கணக்கிற்கு பயிர்களை பொறுத்து அதிகபட்சமாக 3 லட்சம் வரை பயிர் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 5.02.2021-ம் தேதி தமிழக அரசு சட்டசபையில் 31.01.2021-ம் தேதி வரையிலான நிலுவையிலுள்ள பயிர்கடன்கள் தள்ளுபடி செய்யப்படுவதாக அறிவித்தது. அதனை செயல்படுத்த கோயம்புத்தூரில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி அலுவலகத்தில் கோயம்புத்தூர் மண்டல இணை பதிவாளர் தலைமையில் 07.02.2021-ம் தேதி மீட்டிங் நடந்தது. அந்த மீட்டிங்கில் ஒவ்வொரு சங்கத்திற்கு வெரிபிகேஷன் அதிகாரிகளை நியமித்தார்கள். எங்கள் சங்கத்தில் 275 பயனாளிகள் பயிர் கடன் தள்ளுபடிக்கு தகுதியான பயனாளிகள் என பட்டியல் தயார் செய்து 09.02.2021-ம் தேதி நிர்வாக குழுவில் அனுமதி பெறப்பட்டது. மேற்படி பட்டியலின் ஆவணங்கள் சர்பார்ப்பு பணிக்காக பொதுவிநியோக திட்ட கூட்டுறவு சார்பதிவாளர் நித்யா கார்த்திராஜ், மத்திய வங்கி உதவி மேலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேற்படி இருவரும் எங்கள் அலுவலகத்திற்கு 10.02.2021 மற்றும் 12.02.2021 ஆகிய தேதிகளில் வந்து ஆவணங்கள் சரிபார்த்தார்கள். அதில் 17 பயனாளிகளுக்கு உண்டான ஆவணங்களில் பயிரிடப்பட்டுள்ள பரப்புக்கு ஏற்ப கடன் வழங்காமல் கூடுதலாக ரூ.8 லட்சத்திற்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கோவை மண்டல இணை பதிவாளர் திரு.பழனிச்சாமி அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்தார்கள். உடனே இணைபதிவாளர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு கேட்ட போது நான் மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் திரு.செல்லமுத்து அவர்களின் பரிந்துரையின் பேரில் தான் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தேன். அதற்கு அவர் ஏன் அப்படி கொடுத்தீர்கள் என்று கேட்டார். அதன்பின்பு அவர் சரிபார்ப்பு பணிக்கு வந்த அலுவலர்களிடம் அந்த 17 பயனாளிகளுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட பயிர்கடன் ரூ.8 லட்சத்தை கழித்துவிட்டு பட்டியல் தயாரிக்குமாறு அறிவுறுத்தினார். அதன்படி நான் சரிபார்ப்பு குழு அலுவலர்களின் உத்தரவின் பேரில் பட்டியல் தயாரித்து அவர்களிடம் கொடுத்தேன். கோவையில் 14.02.2021-ம் தேதி காலை 10.00 மணிக்கு மீட்டிங் நடந்தது. அந்த மீட்டிங்கிற்கு நானும், சங்க தலைவர் பி.கே.கோபிநாதசாமி அவர்களும் சென்றோம். அந்த மீட்டிங்கிற்கு பொள்ளாச்சி சரக கூட்டுறவு துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்கள் வந்தார்கள். அப்போது நானும், தலைவரும் 17 பயனாளிகளின் பட்டியல் சம்பந்தமாக இணை பதிவாளர் அவர்களை சந்திக்க

உள்ளதாக சொன்னபோது துணை பதிவாளர் அவர்கள் இந்த விசயத்தை எல்லாம் அவரிடம் சொல்ல வேண்டாம். அவர் ஒத்துக் கொள்ள மாட்டார் நான் முடித்து தருகிறேன் என்று சொன்னார். அந்த மீட்டிங் நடந்து கொண்டிருந்த போது இரவு சுமார் 8 மணியளவில் இணைபதிவாளர் அவர்கள் என்னையும், சரிபார்ப்பு அலுவலர்களையும், மத்திய வங்கி பொதுமேலாளர் ஆகியோர்களை அவரது அறைக்கு அழைத்து 17 பயனாளிகளுக்கு கடன் கூடுதலாக வழங்கியது சம்பந்தமாக விசாரித்தார். அப்போது நான் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மேற்பார்வையாளர் செல்லமுத்து அவர்களின் பரிந்துரையின் பேரில் கடன் வழங்கியதாக தெரிவித்தேன். இணைபதிவாளர் அவர்கள் வங்கி பொது மேலாளர் அவர்களிடமும் கேட்ட போது அவரும் சுற்றறிக்கை உள்ளது என்று தெரிவித்தார். அதன்பின்னர் இணைபதிவாளர் அவர்கள் அதனை ஒத்துக் கொண்டு பட்டியலில் 17 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை முழுவதையும் சேர்க்குமாறு அறிவுறுத்தினார். 15.02.2021-ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்கள் அவரது செல்போன் எண் 7338720304 -லிருந்து எனது செல்போன் 8825964489-க்கு தொடர்பு கொண்டு பட்டியலை தயார் செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பட்டியல் தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் பட்டியலை எடுத்துக் கொண்டு அலுவலகம் வா என்று சொன்னார். நான் தயார் செய்து வைத்திருந்த பட்டியலை எடுத்துக் கொண்டு மாலை சுமார் 5 மணியளவில் பொள்ளாச்சி மகாலிங்கபுரத்தில் உள்ள துணை பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடமிருந்த பட்டியலை வாங்கி பார்த்துவிட்டு இந்த பிரச்சனை எப்படி முடிந்தது என்று கேட்டார். அதற்கு நான் இணைபதிவாளர் நேரில் விசாரித்ததை சொன்ன போது இந்த பிரச்சனை இன்னும் முடியல நான் தான் இந்த பிரச்சனையை முடிக்கனும். நீங்க 17 பயனாளிகளுக்கு கூடுதலாக பயிர்கடன் கொடுத்திருக்கிறீங்க என்று ரிப்போர்ட் அனுப்பிருவேன். உனக்கு எதிரா உயர் அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் அனுப்பாமல் இருக்க என்னை கவனியுங்கள் என்று சொல்லி பணம் கேட்டார். அதற்கு நான் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் நான் பட்டியலில் தலைவரிடமும், சரிபார்ப்பு குழு அலுவலர்களிடமும் 15.02.2021-ம் தேதி கையொப்பம் பெற்று இணை பதிவாளர், மத்திய கூட்டுறவு வங்கி, பொள்ளாச்சி சரக துணை பதிவாளர் மற்றும் கூட்டுறவு தணிக்கை துறை ஆகிய அலுவலகங்களுக்கு கொடுத்தேன். 16.02.2021-ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் துணை பதிவாளர் அவர்கள் எனது செல்போனில் தொடர்பு கொண்டு 17 பைலை எடுத்து கொண்டு வருமாறு சொன்னார். அதன்படி நானும், சேல்ஸ்மேன் தர்மலிங்கமும் பைலை எடுத்துக்

கொண்டு மாலை சுமார் 5 மணியளவில் துணை பதிவாளர் அலுவலகம் சென்று நான் வந்த விபரத்தை பியூனிடம் சொன்னேன். அப்போது பியூன் துணை பதிவாளர் காத்திருக்க சொன்னதாக தகவல் சொன்னார். அதன்படி நான் காத்திருந்தேன். என்னை கூப்பிடவில்லை. இரவு சுமார் 7.30 மணியளவில் துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்கள் வீட்டிற்கு செல்வதற்காக வெளியே வந்தார். அவருடன் ஆனைமலை கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ஆறுமுகம் அவர்களும் வந்தார். அப்போது துணை பதிவாளர் அவர்கள் என்னை பார்த்து நாளை காலை 10.00 மணிக்கு அலுவலகம் வர சொன்னார். துணை பதிவாளர் சென்ற பின்பு ஆறுமுகம் அவர்கள் என்னிடம் விசாரித்துவிட்டு இந்த பிரச்சனை சம்பந்தமாக துணை பதிவாளரிடம் பேசுவதாக கூறினார். 18.02.2021-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் கூட்டுறவு சார்பதிவாளர் ஆறுமுகம் அவர்கள் எனது அலுவலகத்திற்கு வந்து அந்த 17 பைல்களை துணை பதிவாளர் அவர்கள் தன்னிடம் பார்க்க சொன்னதாக சொன்னார். நான் அந்த 17 பைல்களை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டு இது இணை பதிவாளர் முடித்து வைத்த பைல் என்றும் இதில் ஏதும் பிரச்சனை இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பிரச்சனை இல்லை என்று நாங்கள் தான் சொல்ல வேண்டும். அந்த பைல்களில் நகல்களை துணை பதிவாளர் எடுத்து வர சொன்னார் என்று கூறினார். மேலும் அவர் என்னிடம் துணை பதிவாளர் அவர்கள் 17 பயனாளிகளின் பைலை தோண்டி எடுத்து பிரிவு 80 (1) - ன்படி விசாரணை போட்டு விடுவதாகவும், இந்த பைல் சம்பந்தமாக உன் மேல் ரிப்போர்ட் அனுப்பாமல் இருக்க வேண்டுமானால் 1.25 லட்சம் அவருக்கு தனியாக கொடுக்க வேண்டுமென்று தன்னிடம் சொல்லி கேட்க சொன்னதாகவும் தெரிவித்தார். உன் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருக்க அவர் கேட்ட பணத்தை கொடுத்து விடு என்றும் சொன்னார். அதற்கு நான் இந்த முடிந்து போன பைலுக்கு இவ்வளவு பணம் கேட்கிறீர்கள் நான் விவசாயிகளிடமும் போய் கேட்க முடியாது எனக்கு சம்பளமும் குறைவாக தான் வருகிறது அவரிடம் கொஞ்சம் குறைத்து கொள்ள சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் கண்டுகொள்ளவில்லை. பணத்தை ரெடி பண்ணிவிட்டு மாலையில் என்னிடம் கொடுத்துவிடு என்று சொன்னார். அதன்பின்னர் நான் மாலை சுமார் 5 மணியளவில் துணை பதிவாளர் அலுவலகம் சென்று துணைபதிவாளர் அவர்களை நேரில் சந்தித்து பணத்தை குறைக்கும்படி கேட்க சென்றேன். அவர் அலுவலகத்தில் இல்லாததால் அவருக்கு செல்போனில் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் மீட்டிங்கில் இருப்பதாகவும் நாளை காலை பார்க்கலாம் என்று போனை வைத்து விட்டார். இரவு சுமார் 9.30 மணியளவில் கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் அவரது செல்போன் எண் 9943695120 லிருந்து எனது செல்போனுக்கு அழைத்து ஏன் பணம் கொண்டு வருவதாக சொல்லி விட்டு வரவில்லை

என்று கேட்டார். அதற்கு நான் துணை பதிவாளர் அவர்களை நேரில் பார்த்து பணத்தை குறைக்குமாறு கேட்பதற்காக சென்ற போது அலுவலகத்தில் இல்லை என்றும் அவருக்கு போன் செய்த விபரத்தை சொன்னேன். மறுபடியும் ஏன் அங்கு போனீங்கள். என்னிடம் இதுசம்பந்தமாக ரிபோர்ட் போட சொல்லியுள்ளார். ரிப்போட் போடாமல் இருக்க பணத்தை கொண்டு வந்து 19.02.2021-ம் தேதி காலை 10.00 மணிக்கு வஞ்சியாபுரம் பிரிவுக்கு வந்து என்னை கூப்பிடுங்கள் என்று சொன்னார். நான் இன்று 19.02.2021-ம் தேதி காலையில் கோவையில் உள்ள அரசு அச்சகத்திற்கு வந்துவிட்டேன். அப்போது கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் காலை சுமார் 9.30 மணியளவில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு எங்க இருக்கிறீர்கள் என்றும் துணை பதிவாளர் அவர்கள் இன்று காலையில் பணம் கொடுத்துவிட்டாரா என்று கேட்டார் அதற்கு அவர் இல்லை என்று கூறியதாகவும் அதற்கு துணை பதிவாளர் தன்னிடம் 17 நபர்களின் பைல்களை எடுத்து கொண்டு அலுவலகத்திற்கு வர சொல்லியுள்ளதால் தான் தற்போது தளவாய்பாளையம் சங்கத்தில் இருப்பதாகவும் அந்த பைல்கள் எங்கு உள்ளது என்று என்னிடம் கேட்டு கிளர்க் சுபத்ராவிடம் போனை கொடுத்தார். நான் சுபத்ராவிடம் பைல் இருக்கும் இடத்தை சொன்னேன். நான் அவரிடம் எனது வேலையை முடித்துவிட்டு துணை பதிவாளர் அலுவலகத்திற்கு வந்துவிடுகிறேன் என்று சொன்னேன். மதியம் சுமார் 1 மணியளவில் துணை பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பார்த்த போது துணை பதிவாளர் அவர்களது அறையில் துணைபதிவாளரிடம் ஆறுமுகம் பேசி கொண்டிருந்தார். அப்போது துணை பதிவாளர் என்னை பார்த்தவுடன் ஏன் காலையில் வரவில்லை என்று விசாரித்துவிட்டு பைல்களை ஆறுமுகத்தை எடுத்து வர சொல்லியதாகவும், அவரும் தன்னிடம் கொடுத்துவிட்டதாகவும் நான் ஆறுமுகத்தை தான் இதற்கு விசாரணை அதிகாரியாக போடப் போகிறேன் என்றும் சொன்னார். அதன்பின்னர் நான் வெளியே வந்து காத்திருந்த போது ஆறுமுகம் வந்து காலையிலேயே 1.25 லட்சம் பணத்தை கொடுத்திருந்தால் இந்த பிரச்சனை முடிந்திருக்கும் என்றும் நீங்கள் காலையில் பணத்தை கொடுக்காததால்தான் அவர் பைலை எடுத்து கொண்டு வரும்படி என்னிடம் சொன்னார். மேலும் சீக்கிரமாக போய் பணத்தை எடுத்து கொண்டு வந்து என்னிடம் அலுவலகத்திற்கு வந்து கொடுங்கள் என்று சொன்னார். சங்கத்தில் 17 பயனாளிகளுக்கு கூடுதலாக கடன் தொகை வழங்கியது சம்பந்தமாக இணை பதிவாளர் அவர்கள் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லி முடித்த பிரச்சனையை துணை பதிவாளர் திரு.செல்வராஜா மற்றும் ஆனைமலை கூட்டுறவு சார் பதிவாளர்/கள அலுவலர் திரு.ஆறுமுகம் ஆகியோர் 17 பயனாளிகளுக்கு கூடுதலாக கடன் தொகை கொடுத்துள்ளதாக சொல்லி பைலை கிளறி என் மீது மேல் அதிகாரிகளுக்கு அறிக்கை

அனுப்பாமல் இருப்பதற்காகவும், பிரிவு 80 (1) ன் படி நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும் என்னை அச்சுறுத்தி லஞ்சமாக பணம் 1.25 லட்சம் கேட்கிறார்கள். நான் யோசித்து பார்த்ததில் துணை பதிவாளர் திரு.செல்வராஜா அவர்கள் கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் மூலமாக கேட்கும் லஞ்ச பணத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை என்பதால் என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கும் துணை பதிவாளர் திரு. செல்வராஜா மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர் திரு. ஆறுமுகம் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, sd/-(xxxx) 19.02.2021 (C.Sivaji). Sir, Received the complaint on 19.02.2021 at 15.30 hrs sd/-(xxxx) 19.02.2021 (M.Vijiyalakshmi), Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No.8/2021/AC/CB u/s.7(a), 7(a) r/w 12 of the PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 19.02.2021 at 15.45 hrs sd/-(xxxx) 19.02.2021 (M.Vijiyalakshmi), Inspector, VAC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(M.விஜயலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.